அவர்பால் பற்று கொண்டு பணியாற்றிய பேரன்பர்களுக்கும் தன் ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)

(3) வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்.— விடைகள். வினா எண் 1, திரு. கே. தவசி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

1—

ஆண்டிப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அமைத்தல்.

22709—திரு. கே. தவசி :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தாலுகாவுக்கென ஆண்டிப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1993–94 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசாணை எண். 364, நிதித்துறையின் நாள்: 21–5-1993-ன் படி ஆண்டிப்பட்டியில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட்டு 17–8–1993 அன்று முதல் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அளித்த மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அது தற்சமயம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 17]

முற்பகல் 10-10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சார்நிலைக் கருவூலங்கள் வாடகைக் கட்டிடங்களில் தான் இயங்கி வருகின்றன. ஆண்டுக்காண்டு 2 அல்லது 3 என்ற விகிதத்தில் அவற்றுக்கான கட்டிடங்கள் ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே துவக்கப்பட்டு, பல்லாண்டுக்காலம் நடைபெற்று வருகின்ற சார்நிலைக் கருவூலங்களுடைய அவசியம், தேவை, நெருக்கடி ஆகியவைகளை எல்லாம் உள்ளத்திலே கொண்டு ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. அந்த முறைப்படி ஆண்டிப்பட்டியில் உள்ள சார்நிலைக் கருவூலத்திற்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு இப்போது இல்லை. நாளடைவில் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 2, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

2—

மதுரை சார்பு நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமித்தல்.

* 9313—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சார்பு நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாமல் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நீதிபதிகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரையில் 3-வது கூடுதல் சார்பு நீதிபதி பதவி மட்டுமே காலியாக இருந்தது. அதுவும் தற்போது நிரப்பப்பட்டுவிட்டது.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் 3-வது சார்பு நீதிமன்றத்திலே கடந்த 5 ஆண்டுகாலமாக நீதிபதி இல்லாத நிலை இருந்ததால் அங்கே வழக்குகள் அதிகமாக தேங்கி இருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிபதியை நியமனம் செய்துவிட்டதாக விடை கொடுத்தார்கள். அங்கே அதிகமான வழக்குகள் தேங்கி உள்ளதால் மேலும் ஒரு சார்பு நீதிமன்றம் மதுரையில் அமைப்பதற்கு ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.